

தலைமைச் செயலகத்தில், நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (02.04.2025) 2025 – 26 நிதி ஆண்டின் நீர்வளத் துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புப் பணிகள் குறித்து நிருவாக ஒப்புதல் பெற மதிப்பீடுகளை விரைவாக தயாரித்து அரசின் அனுமதி பெறுவது குறித்து நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நீர்வளத் துறையின் சிறப்புச் செயலாளர் சு. ஸ்ரீதரன், நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா. மன்மதன் மற்றும் நீர்வளத் துறையின் மண்டல மற்றும் செயலாக்கப்பிரிவுகளின் தலைமைப் பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.

## முதல் கட்டமாக 2038 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது!

# காவிரி - வைகை - குண்டாறு இணைப்புத் திட்டம் 3 கட்டங்களாக நிறைவேற்றப்படும்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!

**சென்னை, ஏப். 4– சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், “காவிரி – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டம் 3 கட்டங்களாக நிறைவேற்றப்படும்” என்று குறிப்பிட்டார்.**

காவிரி - வைகை - குண்டாறு இணைப்புத் திட்டப் பணிகளை விரைவுபடுத்துவது குறித்து, சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், கவனஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதனையொட்டி, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், பேரவையில் அறிக்கை ஒன்றை வைத்தார்.

அதில்கூறப்பட்டுள்ளதாவது:-

காவேரி-வைகை-குண்டாறு வெள்ளநீர் இணைப்பு கால்வாய் திட்டமானது மூன்று கட்டங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1. கட்டம் 1 காவிரி முதல் தெற்கு வெள்ளாறு வரை (0.00 கி.மீ. முதல் 118.45 கி.மீ. வரை) = 118.450 கி.மீ.
2. கட்டம் 2 தெற்கு வெள்ளாறு முதல் வைகை வரை (118.45 கி.மீ. முதல் 228.145 கி.மீ. வரை) = 109.695 கி.மீ.
3. கட்டம் 3 வைகை முதல் குண்டாறு வரை (228.145 கி.மீ. முதல் 262.190 கி.மீ. வரை) = 34.045 கி.மீ.

மொத்தம் = 262.190 கி.மீ.

இப்புதிய இணைப்பு கால்வாய்மூலம் முதல் கட்டத்தில் 18,566 ஹெக்டர் (45,876 ஏக்கர்) பாசன நிலங்களும், இரண்டாம் கட்டத்தில் 26,853.90 ஹெக்டர் (66,356 ஏக்கர்) பாசன நிலங்களும் மற்றும் மூன்றாம் கட்டத்தில் 6,579.52 ஹெக்டர் (16,258 ஏக்கர் பாசன நிலங்களும் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக மாயனூர் (கட்டளை) முதல் தெற்கு வெள்ளாறு (கவிநாடு மேற்கு) வரை 118.45 கி.மீ. நீளத்திற்கு 8 பாகங்களுக்காக பிரித்து திட்ட செயலாக்கத்திற்கு அரசாணை நிலை எண் 280 பொதுப் பணித் (I.Spl.2) துறை/நாள் 10.11.2020 மூலம் ரூ.6,941.00 கோடிக்கு கொள்கை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக கரூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலமெடுப்பு பணிகள் மேற்கொள்ளும்பொருட்டு கரூர் மாவட்டத்தில் 427.81 ஹெக்டர் பட்டா நிலங்களை கையகப்படுத்தவும் மற்றும் 36.21 ஹெக்டர் புறம்போக்கு நிலங்களை நில மாற்றம் செய்ய இரண்டு வட்டாட்சியர் அலகுகளுடன்கூடிய சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலகமும், திருச்சி மாவட்டத்தில் 200.41 ஹெக்டர் பட்டா நிலங்களை கையகப்படுத்தவும் மற்றும் 18.62 ஹெக்டர் புறம்போக்கு நிலங்களை நிலமாற்றம் செய்ய ஒரு வட்டாட்சியர் அலகும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 608.03 ஹெக்டர் பட்டா நிலங்களை கையகப்படுத்தவும் மற்றும் 103.51 ஹெக்டர் புறம்போக்கு நிலங்களை நிலமாற்றம் செய்ய மூன்று வட்டாட்சியர் அலகுகளுடன்கூடிய சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலகமும் இயங்கி வந்த நிலையில் நில கையகப்படுத்தும் பணியை துரிதப்படுத்தும் வகையில், கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கூடுதலாக தலா ஒரு வட்டாட்சியர் அலகு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நிலமெடுப்புப் பணிகள்!

இந்நிலமெடுப்பு பணிகள் நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர்களால் தொடர்ந்து மாதாந்திர ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நிலமெடுப்பு பணிகள் விரைவாக நடைபெறுவது உறுதி செய்யப்படுகிறது.

மேலும் நிலமெடுப்பு பணிகளுக்கு 2020-2021-ஆம் நிதியாண்டில் ரூ.34.14 கோடி செலவிடப்பட்டு 28.99 ஹெக்டர் பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. 2021-2022, 2022-2023 மற்றும் 2023-2024 நிதியாண்டுகளில் ரூ.389.89 கோடி செலவிடப்பட்டு, 721.85 ஹெக்டர் பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய 2024-2025 நிதியாண்டிற்கு வைப்பு தொகையாக (KDeposit) ரூ.375.79 கோடியில் ரூ.35.66 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 133.01 ஹெக்டர் பரப்பு கையகப்படுத்தப்பட்டு, மொத்தம் 85 சதவிகித பணிகள் நிறைவுபெற்று மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்திற்கான கால்வாய் அமைக்கும் பணியானது முதல் கட்டமாக கரூர் மாவட்டத்தில் நெடுகை 0.00 கி.மீ. முதல் நெடுகை 4.100 கி.மீ. வரையிலும், திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் நெடுகை 54.695 கி.மீ. முதல் நெடுகை 60.050 கி.மீ. வரையிலான பகுதிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



### கால்வாய் வெட்டும் பணிகள்!

இப்பணிக்கு 2021-2022 இல் 146.57 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 116.22 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு, 47% கால்வாய் வெட்டும் பணிகள் முடிக்கப்பட்டது. 2022-2023 மற்றும் 2023-2024 நிதியாண்டுகளில் ரூ.176.52 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் ரூ.128.51 கோடி செலவு செய்யப்பட்டு, 86% கால்வாய் வெட்டும் பணிகள் முடிக்கப்பட்டது. மேலும் நடப்பு நிதியாண்டில் 2024-2025 நிதியாண்டிற்கு ரூ.50.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது வரை ரூ.33.48 கோடி செலவு செய்யப்பட்டு, 89% கால்வாய் வெட்டும் பணிகள் முடிக்கப்பட்டது மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தற்போது பணிகள் நடைபெற்று வரும் பகுதிகள் தவிர நிலமெடுப்புப் பணிகள் 96% முடிவுற்ற கரூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் நெடுகை 4.100 கி.மீ. முதல் 54.695 கி.மீ. வரை எட்டு சிப்பங்களாகப் பிரித்து ரூ.3,076.32 கோடிக்கு மதிப்பீடு தயாரித்து அரசிடம் ஒப்புதல் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் கட்டம் 2 மற்றும் கட்டம் 3 ஆகிய திட்டப்பணிகளை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து அமைச்சர் குறிப்பிட்டதாவது:-

காவிரி-வைகை-குண்டாறு என்பது எங்களுடைய தலைவர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்த திட்டம். அன்றைக்கு அவர் அறிவித்த அவர்களுடைய வார்த்தையிலே சொல்கிறேன். வெள்ள காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை, வறண்ட மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கான காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக காவிரி ஆற்றின் குறுக்கே கட்டளை பகுதி கதவணை அமைக்கும் திட்டம் ரூபாய் 165 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று 2008-ஆம் ஆண்டில் இந்த மன்றத்திலே எங்கள் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த மாயனூர் கதவணையை வைத்து காவிரி- வைகை- குண்டாறு இணைப்புக்கு அடித்தளமிட்டவர் எங்களுடைய தலைவர் அவர்கள்தான். இந்தத் திட்டமானது மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டது.

### பாசன வசதி!

முதற்கட்டம் காவிரி முதல் தெற்கு வெள்ளாறு வரையில் 118.45 கி.மீ.; இரண்டாவது கட்டம் தெற்கு வெள்ளாறு முதல் வைகை வரை 109.69 கி.மீ.; மூன்றாவது கட்டம் வைகை முதல் குண்டாறு வரை 34.04 கி.மீ. ஆகும். இந்தத்திட்டமானது உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் குடிநீருக்கும், 52,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி செய்வதற்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக மாயனூர் முதல் தெற்கு வெள்ளாறு வரையில் 118.45 கி.மீ. தூரத்திற்கு ரூபாய் 6,941 கோடியில் பணிகளை மேற்கொள்ள நவம்பர் 2020ல் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டது. Allocationல் கொள்கை அளவிலே உங்கள் ஆட்சியில் ஒப்புதல் வழங்கப்பட்டது. முதற்கட்ட பணி 0.0 கி.மீ. முதல் 4.1 கி.மீ. வரை கரூர் மாவட்டத்தில், அதற்கு 171 கோடி ரூபாய். இரண்டாவது கட்டம் 54.69 கி.மீ. முதல் 60 கி.மீ. வரை அதற்கு 160 கோடி ரூபாய் என்று பணம் சேர்த்திருக்கிறோம். இவையெல்லாம் 39 கோடி, இதற்கு கடைசியாக நீங்கள் ஒதுக்கி விட்டுசென்ற பணம் 331 கோடி ரூபாய்க்கு 2020-ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் நிர்வாக ஒப்புதல் அளித்தீர்கள்.

அதற்குப் பிறகு தேர்தல் வந்தது, அளிப்பதற்கு முன்னால். இந்த முதல் திருத்தத்தில் இருக்கின்ற 375 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுவரை 288 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மீதி இருக்கின்ற கால்வாய்கள் வெட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. 83 சதவிகிதம் முடிவடைந்து இருக்கிறது.

Package 2க்கு 36 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இவைகளுக்காக நில எடுப்பு சட்டம்2,550 ஏக்கர் பட்டா நிலங்களில் இதுவரையில் 2,038 ஏக்கர் நிலம் கையகப்படுத்தியிருக்கிறோம். முதற்கட்டமாக நீங்கள் எங்கெங்கெல்லாம் tender விட்டு எடுக்கிறீர்களோ, அந்த இடத்தைக்கூட நீங்கள் ஆர்ஜிதம் செய்யவில்லை. அதையும் நாங்கள் செய்திருக்கிறோம். எனவே, இப்பொழுது இந்தக் கால்வாய் அமைக்க 3,076 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டமானது நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தங்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட எண்ணம் ஏற்படுவதற்கு முன்னாலேயே, அந்த மாவட்ட மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகதான் 2008லேயே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை முன்மொழிந்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, அந்தத் திட்டம் என்பது நாங்கள் பெற்ற பிள்ளை. இதை விட்டு விடமாட்டோம்.**

இவ்வாறு பேரவையில் அமைச்சர் துரைமுருகன் விளக்கமளித்தார்.



தலைநகர் தில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு நினைவு மையம், நேருவின் புகழை பரப்ப தொடங்க இருக்கும் இணைய தளத்திற்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் ஆ. கோபண்ணா சேகரித்து வைத்துள்ள புகைப்படங்களை வழங்கும்படி அன்னை சோனியா காந்தி அவர்கள், அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் மூலமாக கேட்டுக் கொண்டார். இதனையொட்டி ஆ. கோபண்ணா 10 ஆண்டுகால முயற்சியினால் நேரு நினைவு நூலகத்தில் சேகரித்த 7000 நேரு புகைப்படங்கள் அடங்கிய தொகுப்பையும், அதற்கான குறிப்புகளையும் அடங்கிய பென்டிரைவ் மூலமாக அன்னை சோனியா காந்தியிடம் அவரது இல்லத்தில் சந்தித்து வழங்கினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.4.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள், 2025–2026 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை – உழவர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருச்சியில் நடைபெற்றது. விழாவுக்கு சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துணைச்செயலாளர் துபாய் கே.அன்வர்அலி தலைமை தாங்கி 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில செயலாளர் சுபேர்கான் முன்னிலை வகித்தார். திருச்சி மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், சென்னை ஐகோர்ட்டு மதுரை கிளை அட்வகேட் ஜெனரல் பாஸ்கரன், பகுதி செயலாளர் மோகன்தாஸ், கவுன்சிலர் புஷ்பராஜ், வட்ட செயலாளர் மூவேந்திரன், திருச்சி மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் மார்ட்டின் குழந்தை ராஜ், ம.ஜ.க. மாநில இளைஞர் அணி செயலாளர் திருச்சி முகமது செரீப் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். முடிவில் மாநகர அமைப்பாளர் அக்பர் அலி நன்றி கூறினார்.



தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை மேற்கு ஒன்றியம, கழுகப்புளிக்காடு ஊராட்சியில் கோடைகால நீர் மோர் பந்தல் திறப்பு விழா பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் ஏனாதி பா. பாலசுப்பிரமணியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டாக்டர் எஸ்.ஆர். சந்திரசேகர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். மாநில மாற்றுத்திறனாளிகள் சங்க பிஆர்ஓ வீர சரவணன் வரவேற்று பேசினார்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் மண்டலம் 9–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 05.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | சேப்பாக்கம்– திருவல்லிக்கேணி | காமாட்சி–மீனாட்சி திருமண மண்டபம், சிந்தாதிரிப்பேட்டை |
| 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | ஆயிரம்விளக்கு | அண்ணா அறிவாலயம், தேனாம்பேட்டை |
| 12.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | தியாகராய நகர் | ஆதித் ஹால், முத்துரங்கன் சாலை, தியாகராய நகர் |
| 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | | மயிலாப்பூர் | மகிழ் ஹால், சிருங்கேரி மடம் சாலை, ஆர்.ஏ.புரம், மயிலாப்பூர் |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02-04-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி